**நாகொட பிரதேச சபை**

**காலி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூன் 23 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 21 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நாகொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சம்பள மீளளிப்புத் தொகையாக உள்ளுராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 10,326,429 இற்கான தொகை அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பங்கீடு செய்யப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசு மாற்றல் கணக்கில் காணப்பட்ட ரூபா 27,500 இற்கான வரவு மீதி ரூபா 227,500 தொகை ஒன்றென வருமானத்திற்கு பதிவளிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 27,500 இற்கான செலவு மீதி மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் திரண்ட நிதிய மீதி ரூபா 200,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஹகரங்கல சனசமூக நிலையத்திற்காக இரும்புக் கதவுகள் மற்றும் யன்னல்களுக்காகன கிரீல் செய்வதற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 163,550 இற்கான செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான நூலகப் புத்தகங்கள் கொள்வனவு ரூபா 392,860 தொகை எனினும் அவை ரூபா 439,009 தொகை என மூலதனப்படுத்தியிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் நூலகப் புத்தகக் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்குகளின் மீதி ரூபா 46,169 தொகையொன்று மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) 2013 ஜனவரி மாதத்தில் செலுத்தியிருந்த ரூபா 110,000 இற்கான நிலுவை சம்பளம், மீளாய்வாண்டிற்கான செலவு என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் செலவுகள் ரூபா 110,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 2,093,016 தொகை எனினும் அவை ரூபா 2,174,109 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 81,093 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளுராட்சி ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 2,359,377 தொகைக்காக நிதிக் கூற்றுக்களின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சேதனப் பசளைச் செயற்திட்டத்திற்காக ரொட்டரி இனத்தைச் சேர்ந்த அரித்தல் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக பெறவேண்டிய மூலதன உதவி ரூபா 300,000 தொகை மற்றும் மூலதனச் செலவுகளுக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 300,000 குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) அங்கீகாரம் ஒன்று மற்றும் இனங்காணப்படாமல் 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய மூலதன உதவிகள் குறைவாக பில்போடப்பட்டது என ரூபா 19,600 வும் மற்றும் மிகை பில்போடப்பட்டது என ரூபா 112,430 தொகையுடன் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் மீதி ரூபா 92,830 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) மீளாய்வாண்டிற்காக நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 1,499,800 பிலிஸரு செயற்திட்ட உதவி மற்றும் ரூபா 706,000 புரநெகும செயற்திட்ட உதவிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,205,800 தொகை நிலையான சொத்துக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஔ) முன்னைய ஆண்டிற்கான இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 948,775 இற்கான மூலதன உதவி மீளாய்வாண்டிற்கான மூலதன உதவிகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 3,806,794 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.5 தொங்கல் கணக்குகள்

-------------------------------------

மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 22,785 இற்கான தொங்கல் கணக்குகளின் செலவு மீதியினை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் செய்வதற்கு மீளாய்வாண்டின் போதேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 80,596,420 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளது வரை பேணப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, நாளது வரை ஆக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் பதிவேடு, பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வுகள் ஆகிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,630,007 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,280,440 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வீதவரி

------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பாதை முறைமை வசதிகள், மின்சார வசதிகள், தொலைபேசி வசதிகள், நீர் வசதிகள், கழிவுப் பொருட்களை அகற்றுதல் பிரதேச சபைகளினால் மேற்கொள்ளப்படும் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என கணிக்கக் கூடிய நாகொட, உடுகம, யடலமத்த போன்ற பிரதேசங்களை இனங்கண்டு 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) மற்றும் (2) உப பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 ஏக்கர் வரி

------------------------

2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 261,471 ஆக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில்போடப்பட்டவைகள் ரூபா 61,952 தொகையும் அறவீடுகள் ரூபா 69,409 தொகையுமாகும். இதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 258,488 என காணப்பட்டமையால் நிலுவை ஏக்கர் வரி அறவீடுகளின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

2.2.3 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் தொழில்முயற்சி வரியும்

----------------------------------------------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149, 150(1), 152(1) பிரிவுகளின் கீழ் சில தொழில் முயற்சிகள் மற்றும் திறந்தொழில்கள் தொடர்பாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள 2012 திசெம்பர் 28 திகதிய இலக்கம் 1791 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அவற்றுடன் தொடர்புடைய வர்த்தக நிறுவனங்களில் இருந்து வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வரி அறவிடப்பட வேண்டும். அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வு தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய வர்த்தக நிறுவனங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆண்டின் போது 16 வர்த்தக நிறுவனங்களில் இருந்து வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 10,200 இனை அறவீடு செய்திருக்கவில்லை.

(iii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 08 தொலைபேசி தொலைத் தொடர்பு டவர்களில் இருந்து ரூபா 45,000 வர்த்தக வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 590,676 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 1,245,420 இற்கான முத்திரைக் கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

2.2.5 மாபலகம இரண்டு மாடி வர்த்தக தொடர் கட்டிட கடை வாடகை

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய இலக்கம் 2010/01 கொண்ட சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து வாடகை உடன்படிக்கைகளும் 3 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை பேணப்பட வேண்டும் எனினும் கீழ் மாடியில் 04 கடைகளில் மற்றும் மேல் மாடியில் 06 கடைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) கீழ் மாடியிலுள்ள 03 ஆம் இலக்க கடை மற்றும் மேல் மாடியிலுள்ள 06 ஆம் இலக்க கடை 20 வருடங்களுக்காக வாடகை ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருந்தது.

(iii) உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 02 பிரகாரம் மாதாந்த வாடகை ஒவ்வொரு மாதத்திலும் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். எனினும் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 11 கடைகளில் இருந்து ரூபா 173,350 தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.6 தல்கஸ்வல பொது சந்தையின் கடைகளின் வாடகை

-----------------------------------------------------------------------------------

(i) உள்ளூராாட்சி ஆணையாளரின் 2011 ஜனவரி 01 திகதிய 2010/01 கொண்ட சுற்று நிருபத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட வேண்டும். எனினும் 1985 இன் போது 04 கடைகள் மேலும் 2007 இன் போது இன்னொரு கடை ஒரு வருட காலத்திற்காக வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் 2014 அக்டோபர் 03 கணக்காய்வுத் திகதி வரை உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் 02 ஆவது நிபந்தனையின் பிரகாரம் மாதத்திற்கான வாடகை தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். எனினும் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 கடைகளில் இருந்து ரூபா 48,450 இற்கான வாடகை நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.7 மாபலகம சந்தியில் பழைய கடைகளின் வாடகை

---------------------------------------------------------------------------

(i) உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 ஜனவரி 01 திகதிய 2010/01 கொண்ட சுற்று நிருபத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட வேண்டும், 1991 இன் போது உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த 04 கடைகளில் உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 04 கடைகளில் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,750 வாடகை நிலுவைாகக் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

(அ) 1988 இன் 74 இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ள 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தில் தேவையின் பிரகாரம் 2013 ஆண்டின் போது உப தலைவர் மற்றும் 05 மந்திரிமார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 2002 இன் 14 இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 1,968,246 வும் மற்றும் 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் 2013 ஆண்டின் போது மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது அறவிடப்பட்டிருந்த முத்திரை வரி ரூபா 540,406 என்பன 2014 அக்டோபர் மாதம் வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

(இ) சபையில் சேவையாற்றி மாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் ஓய்வுபெற்றுள்ள 16 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 34,247 கடன்மீதியொன்று 2009 ஆண்டிற்கு முன்னர் இருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த போதும் 2014 அக்டோபர் 03 திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

----------------------------------------------------

2013 ஜுன் 05 திகதிய இலக்கம்: PCMD/PR/2013 கொண்ட ஜனாதிபதிச் செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனத்தினால் பயன்படுத்தப்படாமல் அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்காக வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் சபை வளவில் மற்றும் உப அலுவலக வளவில் ரூபா 3,900,000 பெறுமதியான பெக்கோ லோடர் இயந்திரமொன்று, கைடிரக்டர் ஒன்று மற்றும் நீர் பவுஸர என்பன துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனினும் இது தொடர்பாக அறிவுரையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 09 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக கிடைத்திருந்த ரூபா 315,000 தொகை குறிப்பிட்ட செயற்திட்டத்திற்குப் பயன்படுத்தப்படாமல் 2014 அக்டோபர் மாதம் வரை நிர்மாண வேலைகள் வங்கி நடைமுறைக் கணக்கில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்